**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**
**S.C.No.71/2020**

2024 ஆம் வருடம் நவம்பர் மாதம் 20 ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.நவநீதகிருஷ்ணன் (அ.சா.6) | தொழில் | : ஆட்டோ டிரைவர் |
| த/பெ., க/பெ. | : தண்டபாணி | வயது | : 54 |
| கிராமம் | : பழனி | இனம் | : ஆண் |
| தாலுகா | : பழனி | நாள் | : 20.11.2024 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

எதிரி முன்னிலையாகியுள்ளார்.

<u>முதல் விசாரணை :– (சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.</u>

நான் புது நகர், தட்டான்குளத்தில் குடியிருந்து ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. அ.சா.1 திவ்யகுமாரை தெரியாது. சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. வழக்கு பற்றியும் எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பு வேண்டுகோளை ஏற்று சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

அ.சா.1 திவ்யகுமார் தனது நண்பர்கள் பழனி காரமடை பஸ் ஸ்டாப்பிற்கு நண்பரை பேருந்தில் ஏற்றி விடுவதற்காக வந்தார் என்றும், அப்போது ஆனந்தி என்பவரின் தகப்பனாரான எதிரி அரிவாளை எடுத்து திவ்யகுமாரா தகாத வார்த்தைகளால் திட்டி அரிவாளால் வெட்டினார்

என்றும், திவ்யகுமாருக்கு இடது கை மணிக்கட்டில் காயம் ஏற்பட்டது என்றும், மீண்டும் திவ்யகுமார் பயந்து ஓடவே பெரியநாயகியம்மன் கோவில் பின்புறம் ரேசன் கடையின் முன்பு வைத்து எதிரி திவ்யகுமாரை தலையிலும் கையிலும் வெட்டினார் என்றும், சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2024.11.20 17:57:22 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
பழனி.